FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)
(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082835

C

1. District : Virudhunagar PS: Vigilance and Anti Corruption Year: 2026 FIR No.: 09/2026 Date: 05.10.2026
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 15.09.2026 Date to : 19.09.2026 க்குள் ஒருநாள் காலை 11.00
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

   Time Period : Time from : முதல் Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 05.10.2026 Time : 07.00 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) 05.10.2026 Time : 07.00 hrs
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : In Typed
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: About 23 Kms / South
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : (b) Address : கிராம நிர்வாக அலுவலகம், ஆத்திபட்டி
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.இரா.சேகர் (b) Father's/ Husband's Name திரு.இராமகிருஷ்ணன்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : 18.05.1974 (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : விவசாயம் (g) Address : 970, காந்தி நகர், திருச்சுழி மெயின் ரோடு, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1.திருமதி.கலாவ்தி, கிராம நிர்வாக அலுவலர், ஆத்திபட்டி, 2) திரு.அழகர், தலையாரி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், ஆத்திபட்டி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - தாமதம் இல்லை -

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet, if necessary) Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 05.10.2026 காலை 07.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, திருச்சுழி மெயின்ரோடு, காந்திநகர், கதவு எண்.970 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.இராமகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.இரா.சேகர் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகார்மனுவை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார்மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், வாதிமீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், எதிரிகள்மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

5/10/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

05.10.26 at 09.45 hrs

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.r. TASMINE MUMTAJ
Rank: நிலை Insp.i/c/Virudhunagar/VN.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவு குற்ற எண்.09/2026 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 05.10.2026 காலை 07.35 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரிகள் 1) .திருமதி.கலாவதி, கிராம நிர்வாக அலுவலர், ஆத்திபட்டி, 2) திரு.அழகர், தலையாரி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், ஆத்திபட்டி என்பவர்கள் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2026 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.சேகர் அவர்களின் புகார் மனு விபரம் பின்வருமாறு. அனுப்புநர் இரா.சேகர், 52/2026, த/பெ.இராமகிருஷ்ணன், கதவு எண்.970, காந்தி நகர், திருச்சுழி மெயின் ரோடு, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, நான் ஆத்திப்பட்டி கிராம சர்வே எண்.36/1, 37/3,4,5-இல் சாது T R.ஆவுடையம்மாள் நகர் என பெயரிடப்பட்டுள்ள நிலத்தில் 2100 சதுர அடிகளை கொண்ட 33, 34, 35 பிளாட் மனை நிலங்களை 2018-ஆம் ஆண்டு கிரைய பத்திரம் மூலம் வாங்கினேன். அந்த மனை நிலங்களில் 34 மற்றும் 35 மனை நிலத்தை எனது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு கேட்டு 15.09.2026 அன்று இணையதளத்தில் மனு செய்திருந்தேன். அந்த இணையதள மனுதொடர்பாக அந்த வாரத்தில் ஒரு நாள் காலை சுமார் 11.00 மணியளவில் ஆத்திப்பட்டி VAO அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த VAO திருமதி.கலாவதி மற்றும் தலையாரி திரு.அழகர் ஆகியோர்களை சந்தித்து கேட்டேன். அப்போது VAO திருமதி.கலாவதி உங்களது பட்டா மாறுதல் இணையதள மனுவானது, என்னுடைய உள்ளீட்டிற்கு வந்துள்ளது, நான்தான் துணை வட்டாட்சியருக்கு பரிந்துரை செய்யவேண்டும், பட்டா மாறுதல் ஆனபிறகு என்னுடைய உத்தரவின்பேரில் தலையாரி திரு.அழகர்தான் கிராம கணக்கில் பதிவு செய்யவேண்டும், ஆகையால் உங்களுடைய பெயரில் பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்வதற்கும், கிராம கணக்கில் பதிவு செய்வதற்கும் எங்களுக்கு ரூ.3,000/- பணம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் என்னம்மா ரூ.3,000/- ரூபாயா என்று கேட்டேன். அப்போது VAO அம்மாவும், தலையாரியும் சேர்ந்து கொண்டு, எல்லாரிடமும் நாங்க வாங்குற பணம்தான் உங்களிடம் மட்டும் கேட்கலா, எனவே நீங்கள் ரூ.3,000/- பணத்துடன் வந்து பாருங்கள், பட்டா மாறுதல் ஆகிவிட்டாலும், நாங்கள் கேட்ட ரூ.3,000/- பணத்தை கொண்டுவந்து கொடுத்தால்தான் கிராம கணக்கில் பதிவு செய்வோம், வேறு ஏதேனும் சான்றிதழுக்கு வந்தாலும் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். நான் அப்போது வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்நிலையில் கடந்த 25.09.2026 அன்று எனது பெயருக்கு பட்டா மாறுதலாகிவிட்டது. பின்னர் நேற்று (04.10.2026)இரவு சுமார் 08.20 மணியளவில் தலையாரி திரு.அழகர், என்னுடைய கைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு, என்னாச்சுங்க நாங்க கேட்ட பணம் ரூ.3,000/-, பட்டா மாறுதலாகிவிட்டது என்று எங்களை பார்க்க வரவில்லையா, நாளைக்கு (05.10.2026) காலைல

வந்து பாருங்க என்றும், அவ்வாறு பார்க்க வரவில்லை என்றால் கிராம கணக்கிலும் பதிவு செய்யமாட்டோம், வேறு ஏதாவது சான்றிதழுக்கு வந்தால் செஞ்சு கொடுக்கமாட்டோம், இதை VAO அம்மாதான் சொல்ல சொன்னாங்க என்று கண்டிப்புடன் கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய பரிந்துரை செய்ததற்கும், கிராம கணக்கில் பதிவு செய்வதற்கும் என்னிடம் ரூ.3,000/- லஞ்சப்பணம் கேட்ட ஆத்திப்பட்டி VAO திருமதி.கலாவதி மற்றும் தலையாரி திரு.அழகர் ஆகியோர்கள்மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (sd) Sekar, 5/10/26 Sir, Received the complaint on 05.10.2026 at 07.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, DVAC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.9/2026 u/s 7 of the PC Act 1988 as amended in 2018 on 05.10.2026 at 07.35 hrs and took up for investigation. (Sd) (S.JASMINE MUMTAJ) 05/X/26 Insp/V&AC/VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

05/X/26.

Insp/V&AC/VN